# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**ந.க.எண் : 4961/2022 / எம்சி. 8 நாள் 17.10.2022**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 12.10.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட மாமன்ற சாதாரணக் கூட்டம் - **19.10.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு** நடைபெறுதல் -தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 12.10.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெற இருந்து பின்னர் ஒத்திவைக்கப்பட்ட **மாமன்ற சாதாரணக் கூட்டம் 19.10.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/உத்திரவின்படி அனுப்பப்படுகிறது /**

**மாமன்றச் செயலாளர்**

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

## திருக்குறள்

வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு.

**குறள் - 632**

## விளக்கம்

மனத்துணிவு, குடிகளைக் காத்தல், நல்ல நூல்களைக் கற்றல், தூய அறிவு பெறல், செயல்திறன் ஐந்தும் அமைவது அரசின் சிறப்பு.

**திருவள்ளுவர்.**

---

## தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம்**

“தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களும் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஹிந்தி மொழியை திணிக்ககூடாது என்று விரட்டியடித்து வெற்றி கண்டனர், தற்போது அந்த ஹிந்தி மொழியை தமிழகத்தில் மீண்டும் திணிக்க முற்படும் ஒன்றிய அரசை கண்டிக்கிறோம்” என்ற சிறப்புத் தீர்மானம் 100 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு இரா. கார்த்திகேயன் அவர்களால் முன்மொழியப்பட்டு, 12-ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.வெ. இராமமூர்த்தி அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 1 நாள் 19.10.2022</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம்**

‘‘கோயம்புத்தூர் மாநகராட்சியில் தூய்மைப் பணிகள் மற்றும் இதரப் பணிகளுக்காக ஒப்பந்ததாரர்களின்கீழ் பணிபுரியும் ஒப்பந்தப் பணியாளர்களின் கோரிக்கையான சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பலாம்’’ என்ற சிறப்புத் தீர்மானம் மாண்புமிகு மேயர் ஆ. கல்பனா அவர்களால் கொண்டுவரப்பட்டு, 100 ஆவது மாமன்ற உறுப்பினர் திரு இரா. கார்த்திகேயன் அவர்களால் வழிமொழியப்பட்டது.

**<u>சிறப்புத் தீர்மானம் எண் 2 நாள் 19.10.2022</u>**

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 1

பொருள் : புதிய சொத்துவரி விதித்தல் - கோயம்புத்தூர் மாநகராட்சி உத்தேசிக்கப்பட்ட மண்டல அடிப்படை மதிப்பு - நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கையின்படி, மாற்றி அமைத்தல் - குறித்து .

பார்வை : 1.அரசாணை (நிலை) எண்.53 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி4) துறை நாள். 30.03.2022

2.நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/ஆர்-1/2022 நாள்.10.10.2022

---------------------

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் சொத்துவரி பொதுசீராய்வு 01.04.2022 முதல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது .

பார்வை 2-ல் காணும் சுற்றறிக்கையின்படி, அனைத்து மாநகராட்சி/ நகராட்சிகளில் சொத்து வரிவிதிப்பு செய்யும் போது 01.04.2022லிருந்து புதிய மண்டல மதிப்பில் (காரணிகளை சேர்த்து ) வரிவிதிப்பு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது .

ஏற்கனவே 2022-23 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி விதிக்க மண்டல அடிப்படை மதிப்பு கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டது .

| வ. எண் | மண்டலம் | மண்டல அடிப்படை மதிப்பு (சதுரடிக்கு) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு | கல்வி நிறுவனம் | தொழிற் சாலை | வணிகம் | சிறப்பு கட்டிடம் | நட்சத்திர ஓட்டல் |
| 1 | A | ரூ.2.50 | ரூ.4.40 | ரூ.5.00 | ரூ.7.50 | ரூ.10.00 | ரூ.25.00 |
| 2 | B | ரூ.2.20 | ரூ.3.85 | ரூ.4.40 | ரூ.6.60 | ரூ.8.80 | ரூ.22.00 |
| 3 | C | ரூ.1.70 | ரூ.3.00 | ரூ.3.40 | ரூ.5.10 | ரூ.6.80 | ரூ.17.00 |
| 4 | D | ரூ.1.50 | ரூ.2.65 | ரூ.3.00 | ரூ.4.50 | ரூ.6.00 | ரூ.15.00 |

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் பார்வை 2-ல் காணும் சுற்றறிக்கையின்படி மண்டல மதிப்பு (காரணிகளுடன் சேர்த்து) நிர்ணயம் செய்ய வேண்டி உள்ளதால் கீழ்கண்டவாறு மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யலாம் .

| மண்டலம் | மண்டல அடிப்படை மதிப்பு (ரூபாயில் ) | உயர்வு காரணி | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | குடியிருப்பு | | | | வணிகம் | தொழிற் சாலை | கல்வி நிறுவனம் |
| | | 0 – 600 சதுரடி | 601-1200 சதுரடி | 1201-1800 சதுரடி | 1800 சதுரடிக்கு மேல் | | | |
| A | 1.50 | 1.25 | 1.50 | 1.75 | 2.00 | 2.00 | 1.75 | 1.75 |
| B | 1.30 | | | | | | | |
| C | 1.00 | | | | | | | |
| D | 0.90 | | | | | | | |

1. மண்டலம் (Zone )

| அ. | மண்டலம் | A | B | C | D |
|---|---|---|---|---|---|
| ஆ. | அடிப்படை மதிப்பு (Basic value) ( ஒரு சதுரடிக்கு) ரூபாய்) | 1.50 | 1.30 | 1.00 | 0.90 |

2 .கட்டிடத்தின் தன்மை (Nature of Building)

( நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை நாள்.12.09.2022ன்படி)

| | | |
|---|---|---|
| அ. | சிமெண்ட் கான்கிரீட் கூரை (RCC Building) | தள்ளுபடி இல்லை (No discount) |
| ஆ. | ஓட்டுக்கூரை (Tiled), சிமெண்ட் கூரை (AC Sheet) தகரம் கூரை (GI Sheet) | 5% |
| இ. | கீற்றுக் கூரை (Thatched Roof) | 5% |

3. கட்டிடத்தின் பயன்பாடு (Use of Building)

| | | |
|---|---|---|
| அ. | குடியிருப்புக்கள்(Residential ) | அடிப்படை மதிப்பு - 1.0 |
| ஆ. | கல்வி நிறுவனங்கள் (Education Institutions) | அடிப்படை மதிப்பில் - 1.50 மடங்கு |
| இ. | தொழிற்சாலைகள் (Industrial) | அடிப்படை மதிப்பில் - 2 மடங்கு |
| ஈ. | வணிகம் நிறுவனம் (Commercial ) | அடிப்படை மதிப்பில் - 3 மடங்கு |

4- கட்டிடத்தின் வயது அடிப்படையில் தள்ளுபடி

(Discount for depreciation depending on the Age of Building)

( நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக சுற்றறிக்கை நாள்.12.09.2022ன்படி)

| | | |
|---|---|---|
| 1 | 0 முதல் 20 ஆண்டுகள் வரை | தள்ளுபடி இல்லை (No discount) |
| 2 | 20 ஆண்டுக்கு மேல் | 5% |

5. வார்டு 1 முதல் 100 வரை நிர்ணயம் செய்யப்படும் சொத்துவரி விதிப்புக்கான விகிதாச்சார அடிப்படை (ஆண்டு மதிப்பில்) (Levy of Property Tax % in Annual Value)

| | | |
|---|---|---|
| 1 | பொது பயன்பாட்டு வரி | 6.50% |
| | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் கட்டணம் | 4.00% |
| | மொத்தம் பயன்பாட்டு வரி | 10.50% |
| 2 | கல்வி வரி | 2.50% |
| 3 | நூலகவரி 10% (பொது பயன்பாட்டு வரி மீது ) | 1.05% |
| | மொத்த வரி விகிதம் (ஆண்டு மதிப்பில்) | 14.05% |

எனவே மேற்கண்டவாறு மாநகராட்சியின் 100 வார்டு பகுதிகளையும் A Zone, B Zone, C Zone மற்றும் D Zone என 4 மண்டலங்களாக பிரித்து மண்டல பகுப்பாய்வு செய்து மண்டல அடிப்படை மதிப்பினை காரணிகளுடன் சேர்த்து நிர்ணயம் செய்து 01.04.2022 முதல் புதிய சொத்து வரிவிதிப்பு செய்வதற்கு மாமன்ற அனுமதியினை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.1686/2022/ எம்.ஏ1.

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 266 நாள் 19.10.2022</u>**

இப்பொருள் குறித்து விவாதிக்க தனியாக சிறப்புக்கூட்டம் நடத்தவேண்டும் எனவும், இந்த கூட்டத்திலேயே இப்பொருள் குறித்த தீர்மானம் நிறைவேற்றக்கூடாது எனவும் 47 ஆவது மாமன்ற உறுப்பினர் திரு. ஆர். பிரபாகரன் அவர்கள் தெரிவித்த ஆட்சேபனை பதிவு செய்யப்பட்டது.

பொருள் அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் வரியில்லா இனங்கள்- கோயம்புத்தூர் மாநகராட்சி - வடக்கு மண்டலம் - வார்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்து ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

பார்வை: 1.இவ்வலுவலக குறிப்பு ந.க.எண்.001780/2019/அ1(வ), நாள்.25.04.2022.
2.இளம்பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள். 31.05.2022.
3.வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண்.46 நாள்.02.09.2022.

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பழைய வார்டு எண். 31 புதிய வார்டு எண். 10 விளாங்குறிச்சி ரோடு வணிக வளாகம் 1 முதல் 6 வரையிலான கடைகள் வாடகை நிலுவை தொகை செலுத்தாத காரணத்தால் 09.12.2021 அன்று மாநகராட்சியால் பூட்டி பொறுபேற்கப்பட்டு தற்போது கடைகள் காலியாக உள்ளன. இக்கடைகளுக்கு ஏற்கனவே செலுத்தி வந்த வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்ட அரசு மதிப்பு மிகவும் அதிகமாக உள்ளதால் ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை. எனவே இக்கடைகளுக்கு தற்போதைய பொதுப்பணித்துறை மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு பெறப்பட்டுள்ளன.

பார்வை(2)ல் காணும் இளம்பொறியாளரின் குறிப்பில் வார்டு எண் 31 சரவணம்பட்டி விளாங்குறிச்சி சாலையில் உள்ள வணிக வளாக கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின் படி மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்ட விபரம் கீழ்வருமாறு, (சதுரடி ஒன்றுக்கு ரூ.28.43/-)

| வ.எண் | கடைகளின் விபரம் | கடையின் அளவு (சதுர அடி) | மாத வாடகை |
|---|---|---|---|
| 1 | கடை எண். 01 | 182.5 ச.அடி *28.43/- | ரூ.5181/- |
| 2 | கடை எண். 02 | 182.5 ச.அடி *28.43/- | ரூ.5181/- |
| 3 | கடை எண். 03 | 452.25 ச.அடி *28.43/- | ரூ.12,857/- |
| 4 | கடை எண். 04 | 182.5 ச.அடி *28.43/- | ரூ.5181/- |
| 5 | கடை எண். 05 | 182.5 ச.அடி *28.43/- | ரூ.5181/- |
| 6 | கடை எண். 06 | 182.5 ச.அடி *28.43/- | ரூ.5181/- |

இவ்வணிக வளாக கடைகளுக்கு பொதுப்பணித்துறை மதிப்பு, மற்றும் சந்தை மதிப்பு ஆகிய விபரங்கள் கீழ்வருமாறு,

| வ. எண் | கடைகளின் விபரம் | கடையின் அளவு (சதுர அடி) | ஏற்கனவே இருந்த வாடகை ரூ. | பொதுப்பணித் துறை மதிப்பு ரூ. | சந்தை மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | கடை எண். 01 | 182.5 ச.அடி | 9500/- | 5181/- | 5000/- |
| 2 | கடை எண். 02 | 182.5 ச.அடி | 6100/- | 5181/- | 5000/- |
| 3 | கடை எண். 03 | 452.25 ச.அடி | 11190/- | 12857/- | 12800/- |
| 4 | கடை எண். 04 | 182.5 ச.அடி | 6450/- | 5181/- | 5000/- |
| 5 | கடை எண். 05 | 182.5 ச.அடி | 7200/- | 5181/- | 5000/- |
| 6 | கடை எண். 06 | 182.5 ச.அடி | 10350/- | 5181/- | 5000/- |

எனவே மேற்குறிப்பிட்டுள்ள கடைகளுக்கு தற்போதுள்ள பொதுப்பணித்துறை மதிப்பின் அடிபடையில் கடை எண் 1,2 மற்றும் 4,5,6 ஆகிய கடைகளுக்கு ரூ.5200/- எனவும் கடை எண் 3- க்கு ரூ.12900/- என அரசு மதிப்பு நிர்ணயம் செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.46 நாள். 02.09.2022 -ல் அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.01780/2019/அ1(வ)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 267 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட 100 வார்டுகளில் தனிசரி சேகரமாகும் குப்பைகள் தனியார் மற்றும் மாநகராட்சியின் வாகனங்கள் மூலமாக உக்கடம் மற்றும் பீளமேடு பகுதிகளில் அமைந்துள்ள குப்பை மாற்று நிலையத்திற்கும், வெள்ளலூர் குப்பை கிடங்கிற்கும் கொண்டு செல்லப்பட்டு வருகிறது. இவ்வாறு கொண்டு செல்லும் வாகனங்கள், குப்பைளை கொட்டிய பிறகு அந்தந்த பகுதிகளிலேயே வாகனங்களை கழுவி சுத்தமாக பராமரிக்கவும், வாகனங்களில் துர்நாற்றம் வராமல் இருக்கவும், வெள்ளலூர் குப்பை கிடங்கு, பீளமேடு குப்பை மாற்று நிலையம் மற்றும் உக்கடம் குப்பை மாற்று நிலையம் ஆகிய மூன்று பகுதிகளில் வாகனங்களை சுத்தம் செய்யும் (Vehicle Washing Unit) அமைப்பினை ஏற்படுத்த கீழ்க்கண்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஆணையாளர் அவர்களின் நிர்வாக அனுமதி 15.09.2022 அன்று பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பை கிடங்கு பகுதியில் வாகனங்களை சுத்தம் செய்யும் பணிமனை. (ந.க.எண். 4825/2022/எம்.டி2) | 9.80 |
| 2. | கோயம்புத்தூர் மாநகராட்சி பீளமேடு குப்பை மாற்று நிலையம் பகுதியில் வாகனங்களை சுத்தம் செய்யும் பணிமனை. ந.க.எண். 4821/2022/எம்.டி2) | 9.80 |
| 3. | கோயம்புத்தூர் மாநகராட்சி உக்கடம் குப்பை மாற்று நிலையம் பகுதியில் வாகனங்களை சுத்தம் செய்யும் பணிமனை. (ந.க.எண். 4823/2022/எம்.டி2) | 9.80 |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி வெள்ளலூர் குப்பை கிடங்கு பகுதியில் ஆள்துளை கிணறு அமைக்கும் பணி. (ந.க.எண். 4820/2022/எம்.டி2) | 6.00 |
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி பீளமேடு குப்பை மாற்று நிலையம் பகுதியில் ஆள்துளை கிணறு அமைக்கும் பணி (ந.க.எண். 4824 /2022/எம்.டி2). | 6.00 |
| 6 | கோயம்புத்தூர் மாநகராட்சி உக்கடம் குப்பை மாற்று நிலையம் பகுதியில் ஆள்துளை கிணறு அமைக்கும் பணி (ந.க.எண். 4822/2022/எம்.டி2) | 6.00 |

மேற்காண் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மாமன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 4825 /2022/எம்.டி2

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 268 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி 257.04 சதுர கி.மீ பரப்பளவு கொண்டது. இதில் கடந்த 2011 ஆம் ஆண்டு எல்லை வரன்முறைப்படுத்தப்பட்டதில், மாநகராட்சியின் தெற்கு மண்டல எல்லைக்கு அருகில் இருந்த தெலுங்குபாளையம், குமாரபாளையம், குறிச்சி, குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், ஆகிய கிராமங்கள் இணைக்கப்பட்டது. இதில் சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் சுமார் 40,700 மக்கள் குடியிருந்து வருகின்றனர். மேலும் இப்பகுதி 201.19 ஹெக்டேர் பரப்பளவு கொண்டுள்ளது. இக்கிராமத்திற்கு அருகில் போளுவாம்பட்டி மேற்கு தொடர்ச்சி மலை சுமார் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. எனவே சுண்டக்காமுத்தூர் கிராமம் மலையிடப்பகுதி பாதுகாப்பு ஆணையத்தின் (HACA) கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

சுண்டக்காமுத்தூர் கிராமத்தில் நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் சுமார் 45 எண்ணிக்கையிலான மனைப்பிரிவுகள் நிலையில் உள்ளது. மலை இட பாதுகாப்பு ஆணையத்தின் (HACA) கீழ் இந்த கிராமம் வருவதால் இங்கு அமைக்கப்படும் மனைப்பிரிவுகளுக்கு கனிம வளத்துறை, வனத்துறை மற்றும் வேளாண்மைத்துறையின் தடையின்மை சான்று பெற்ற பின்னரே நகர் ஊரமைப்புத் துறையால் மனை ஒப்புதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நேர்வில் அங்கீகாரமற்ற சிறிய பரப்பளவு கொண்ட மனைகளை வரன்முறைப்படுத்த பொது மக்களால் மேற்காணும் மூன்று துறைகளிலும் தடையின்மை சான்று பெற்று வர இயலவில்லை. ஆதலால் பொதுமக்கள் அவர்கள் தம் சிறிய மனைகளுக்கு மனை வரன்முறைப்படுத்த இயலாமல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே மனைப்பிரிவுகளுக்கு நிபந்தனையுடன் தடையின்மை சான்று வழங்குவது போல சிறிய பரப்பளவு கொண்ட மனைகளுக்கும், நிபந்தனையுடன் தடையின்மை சான்று வழங்கி மனைகளை வரன்முறைப்படுத்த ஏதுவாக நிபந்தனைகளுடன் கூடிய உத்திரவு வழங்குமாறு கோரி நகராட்சி நிர்வாக ஆணையரகம் வழியாக தமிழக அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்க நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் தீர்மானம் எண். 7, நாள்.22..08.2022 நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் வழியாக தமிழக அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.6432/2022/எச்.1(தெ)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 269 நாள் 19.10.2022</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

**பொருள் எண் 5**

**பொருள்:** நிலஉரிமை மாற்றம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் மூலம் ஆத்துப்பாலம் – உக்கடம் மேம்பால நீட்டிப்பு பணி மேற்கொண்டு வருதல் – பாலக்காடு சாலையில் ஏறுதளம் அமைக்கும் பகுதியில் வடிகால் அமைக்க மாநகராட்சிக்கு சொந்தமான மதுக்கரை வட்டம் – குறிச்சி கிராமம் புல எண்.139/1ல் 646 சதுர மீட்டர் (1.48 சென்ட்) நிலம் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்துதரக் கோரியது – தொடர்பாக.

**பார்வை:** 1.கோட்டப்பொறியாளர் (நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.1437/2022/அ1, நாள்.27.06.2022.
2.நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழு தீர்மானம் எண்.8, நாள்.22.08.2022.

********

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட உக்கடம் பகுதியில், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தின் மூலம் ஆத்துப்பாலம் - உக்கடம் மேம்பால நீட்டிப்பு பணி மற்றும் பாலக்காடு சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட மேம்பால பணியின் பொருட்டு, பாலக்காடு சாலையில் ஏறுதளம் அமைக்கும் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க மாநகராட்சிக்கு சொந்தமான மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம் புல எண்.139/1ல் 646 சதுர மீட்டர் (1.48 சென்ட்) நிலம் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்துதரக் பார்வை 1ல் காண் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம் புல எண்.139/1ல் 646 சதுர மீட்டர் (1.48 சென்ட்) நிலம் மாநகராட்சி மயான பகுதியில் அமைகிறது. எனவே, மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை நெடுஞ்சாலைத் துறையினருக்கு நிலஉரிமை மாற்றம் செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று அனுப்ப நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குழுவின் பார்வை 2ல் காண் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.5339/2022/எச்.1(தெ)/எம்.எச்.5

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 270 நாள் 19.10.2022</u>**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 646 சதுர மீட்டர் என்பதற்கு பதிலாக 646 சதுர அடி என திருத்தம் செய்து பொருளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள்.22.08.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் – வார்டு எண் 2க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய்/ திறந்தவெளி கிணறுகளை பத்து மாத காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல். ந.க.எண். 2193/2022/எம்.டி.2 | **11.40** | ம.தீ.எண்.85 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டு தொகை | 1).திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டு தொகை |
| 2 | வடக்கு மண்டலம்– வார்டு எண் 25க்குட்பட்ட காந்திமாநகர் (ஜெபா ஸ்டோர்ஸ் அருகில்) பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறு அமைத்தல். ந.க.எண். 1898/2022/எம்.டி.2 | **5.00** | ம.தீ.எண்.79 நாள். 11.04.22 | மூன்றாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள் ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 2.13% குறைவு | தி/ள் ஆர்.ஆர். எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 2.13% குறைவு |
| 3 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.10–க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல். ந.க.எண். 3200/2022/எம்.டி.2 | **3.90** | ம.தீ.எண்.88 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1). தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.06% குறைவு | தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.06% குறைவு |
| 4 | வடக்கு மண்டலம்–வார்டு எண் 28–க்குட்பட்ட ஷோபா நகர், வரதராஜலு நகர், பட்டாளம்மன் கோவில் வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளில் பழுதடைந்துள்ள குழாய்களை மாற்றுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் ந.க.எண். 1949/2022/எம்.டி.2 | **4.80** | ம.தீ.எண்.77 நாள். 11.04.22 | மூன்றாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.எஸ்.சுதாகர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு | திரு.எஸ்.சுதாகர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு |
| | மொத்தம் | **25.10** | | | | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.2193/2022/எம்.டி2

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 271 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள்.22.08.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு மண்டலம் – வார்டு எண்15–க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை பத்து மாத காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் . ந.க.எண்.2199/2022/எம்.டி4 | **5.80** | ம.தீ.எண். 85 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.பி.கிரிவேல் மதிப்பீட்டை விட 0.04% குறைவு | திரு.பி.கிரிவேல் மதிப்பீட்டை விட 0.04% குறைவு |
| 2 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.3–க்குட்பட்ட ஸ்டேட்பேங்க் காலனி மற்றும் சிவக்குமார் லே அவுட் பகுதிகளில் புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல் ந.க.எண். 2215/2022/எம்.டி.4 | **10.00** | ம.தீ.எண். 87 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.004% குறைவு | தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 0.004% குறைவு |
| 3 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.15–க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்தல் ந.க.எண். 2212/2022/எம்.டி.4 | **9.70** | ம.தீ.எண். 88 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டை விட 0.29% குறைவு | திரு.ஆர்.வி.பி பாலமுருகன் மதிப்பீட்டை விட 0.29% குறைவு |
| 4 | வடக்கு மண்டலம் – வார்டு எண்.12 மற்றும் 13க்குட்பட்ட உருமாண்டம்பாளையம் முதல் சுப்பநாயக்கன்புதூர் வரை நெடுஞ்சாலை துறையினரால் சாலை விரிவாக்க பணி உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் பிரதான குழாயினை மாற்றியமைத்து புதுப்பித்தல் ந.க.எண்.2213/2022/எம்.டி4 | **42.30** | ம.தீ.எண். 87 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.41% குறைவு | தி/ள்.என்.பி.கே அசோசியேட்ஸ் மதிப்பீட்டை விட 0.41% குறைவு |
| 5 | வடக்கு மண்டலம்– வார்டு எண் 28க்குட்பட்ட இளங்கோ நகர் பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் ந.க.எண். 1903/2022/எம்.டி.2 | **4.00** | ம.தீ.எண். 79 நாள். 11.04.22 | மூன்றாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.எஸ். சுதாகர் மதிப்பீட்டைவிட 0.05% குறைவு | திரு.எஸ்.சுதாகர் மதிப்பீட்டைவிட 0.05% குறைவு |
| 6 | வடக்கு மண்டலம்– வார்டு எண் 11 க்குட்பட்ட சிவானந்தபுரம் 3வது வீதி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் ந.க.எண். 1884/2022/எம்.டி.2 | **5.00** | ம.தீ.எண். 78 நாள். 11.04.22 | மூன்றாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.04% குறைவு | தி/ள்.அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.04% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | வடக்கு மண்டலம்–வார்டு எண் 30க்குட்பட்ட கமலா நேரு வீதி, பெரியார் நகர், பொன்னையா வீதி, மாமரத்தோட்டம், அம்பேத்கார் நகர், சித்தா தோட்டம், பூந்தோட்டம், நேருஜி வீதி, கண்ணன் நகர், கணேஷ் லே அவுட் 6 மற்றும் 7வது வீதி பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளில் பழுதடைந்துள்ள குழாய்களை புதுப்பித்தல் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்.<br><br>ந.க.எண். 1951/2022/எம்.டி.2 | **3.80** | ம.தீ.எண். 77 நாள். 11.04.22 | மூன்றாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.ஆர். கார்த்திகேயன் மதிப்பீட்டைவிட 0.24% குறைவு<br><br>2). தி/ள். ஸ்ரீ முருகன் ஏஜென்சீஸ் மதிப்பீட்டைவிட 0.32% அதிகம் | திரு.ஆர். கார்த்திகேயன் மதிப்பீட்டைவிட 0.24% குறைவு |
| 8 | வடக்கு மண்டலம் – வார்டு எண் 10க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய்/திறந்தவெளி கிணறுகளை பத்து மாத காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல்<br><br>ந.க.எண். 2195/2022/எம்.டி.2 | **5.70** | ம.தீ.எண். 85 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1). தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு | தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.01% குறைவு |
| 9 | வடக்கு மண்டலம் – வார்டு எண் 10க்குட்பட்ட சிவசக்தி நகர் பகுதியில் மழைநீர் பம்ப் மோட்டாரை பத்து மாத காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல்<br><br>ந.க.எண். 3205/2022/எம்.டி.2 | **2.50** | ம.தீ.எண். 86 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 04.08.22 | 1). தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.03% குறைவு | தி/ள். அருண் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.03% குறைவு |
| | | **88.80** | | | | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.2199/2022/எம்.டி2

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 272 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 8

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில் விதி எண். 110ன் கீழ் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை)எண்.43 நாள்.27/07/2022 ன்படி அரசு தொடக்கப்பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை உணவு வழங்குதல் திட்டத்தின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட தொடக்கப்பள்ளிகளிலுள்ள 7255 மாணவ/ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்குதல் பணிக்கு ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ள 16/08/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கினர்.

1. M/s.No Food Waste, Coimbatore
2. M/s. SKB Enterprises, Salem

ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட நிறுவனங்களில் M/s. SKB Enterprises, Salem என்கின்ற நிறுவனத்தார் இணையதளத்தில் தொழில்நுட்பத்திற்கான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. மேலும், நேரடியாக சமர்ப்பிக்கப்பட்ட உறைகளில், தொழில்நுட்பத்திற்கான ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை . எனவே, இந்நிறுவனத்தார் தொழில் நுட்ப கூராய்வில் தேர்வு செய்யப்பட வில்லை. M/s.No Food Waste, Coimbatore நிறுவனத்தார் தொழில் நுட்ப கூராய்வில் தகுதி பெற்றதன் அடிப்படையில் 17/08/2022 அன்று விலைப்புள்ளி அடங்கிய உறை திறக்கப்பட்டது.

**அதன் விபரம் பின் வருமாறு :**

| **வ. எண்.** | **பணியின் பெயர்** | **ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் கோரப்பட்ட தொகை** | **தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்** |
|---|---|---|---|
| **1** | மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி கோயம்புத்தூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு காலை உணவு வழங்குதல் திட்டப் பணிக்கு | M/s. No Food Waste, Coimbatore ( ஒரு நபருக்கு காலை உணவின் **செலவினம் ரூ.12.65/–)** **விலைக்குறைப்பு கேட்கப்பட்டதன் அடிப்படையில்** ( ஒரு நபருக்கு காலை உணவின் செலவினம் **ரூ.12.50/–)** | M/s. No Food Waste, Coimbatore **( ஒரு நபருக்கு காலை உணவின் செலவினம் ரூ.12.50/–)** |

மேற்காண் தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர் தி/ள்.நோ புட் வேஸ்ட், கோயம்புத்தூர் நிறுவனத்தார் கீழ்கண்டவாறு விலைவிகிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியிலுள்ள **62** தொடக்கப்பள்ளியில் பயிலும் **7255** எண்ணிக்கை மாணவ / மாணவர்களுக்கு வழங்கும் தினசரி காலை சிற்றுண்டி உணவு வகைகளின் விபரங்கள் :

| **வ. எண்.** | **பள்ளியின் எண்ணிக்கை மற்றும் மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை** | **காலை உணவு வகைகள்** | | **தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்** | **ஒரு மாதத்திற்கான செலவினம்** |
|---|---|---|---|---|---|
| **1** | மாநகராட்சி தொடக்கப்பள்ளி – **62** மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை – **7255** | திங்கள் | ➢ ரவா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ சேமியா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ அரிசி உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ கோதுமை உப்புமா மற்றும் காய்கறி சாம்பார் | M/s. No Food Waste, Coimbatore **( ஒரு நபருக்கு காலை உணவின் செலவினம் ரூ.12.50/–)** | ஒரு மாத காலத்திற்குண்டான **(22** நாட்கள்) **7255** எண்ணிக்கை மாணவர்களுக்கு காலை உணவிற்கான செலவினத் தொகை<br><br>=7255 x 12.50 x 22<br>=ரூ. **19,95,125/-** |
| | | செவ்வாய் | ➢ ரவா காய்கறி கிச்சடி<br>➢ காய்கறி சேமியா கிச்சடி<br>➢ காய்கறி சோளா கிச்சடி<br>➢ காய்கறி கோதுமை கிச்சடி | | |
| | | புதன் | ➢ ரவா பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ வெண் பொங்கல் மற்றும் காய்கறி சாம்பார் | | |
| | | வியாழன் | ➢ ரவா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ சேமியா உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>➢ அரிசி உப்புமா மற்றும் காய்கறி சாம்பார்<br>கோதுமை உப்புமா மற்றும் காய்கறி சாம்பார் | | |

<table>
<tr><th>வ. எண்.</th><th>பள்ளியின் எண்ணிக்கை மற்றும் மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை</th><th>காலை உணவு வகைகள்</th><th>தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்</th><th>ஒரு மாதத்திற்கான செலவினம்</th></tr>
<tr><td></td><td></td><td>வெள்ளி: ➢ செவ்வாய் கிழமையில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் ஒரு வகையில் கிச்சடி.<br>➢ ரவா கேசரி<br>➢ சேமியா கேசரி</td><td></td><td></td></tr>
</table>

மேற்காண் பட்டியலின் படி ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.No Food Waste, Coimbatore நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கிய முன் அனுமதிக்கு பின்னேற்பு வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண். 17404/2022/எம்.சி.ஏ2

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 273 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

**பொருள் :** வரிவிதிப்பு - பழைய வார்டு எண் 56, PSG மருத்துவமனை வளாகம் - சென்னை உயர் நீதி மன்ற வழிகாட்டு உத்தரவின்படி மேல் நடவடிக்கை எடுத்தது - மருத்துவக் கல்லூரி கட்டிடத்திற்கான வரிவிதிப்பு எண் 5659859-ல் 01.10.2017 -க்கு முந்தைய கேட்புகளை இரத்து செய்தல் - மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக

**பார்வை :**
1. மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற ஆணை W.P. எண்: 428/2011 நாள். 23.09.19.
2. PSG நிறுவனத்தின் கடிதம் தேதி 04.10.2021
3. கோவை மாநகராட்சி உயர் நீதி மன்ற வழக்கறிஞர் திரு. K. மகேஷ் அவர்களது கருத்துரை நாள். 29.11.2021.
4. ஆணையாளர் அவர்களது குறிப்பு உத்திரவு நாள். 30.05.2022
5. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்டத் தீர்மானம் எண், 48, நாள். 02.09.2022

--------------------

தமிழ்நாடு சட்டம் 25/1981-ன் படி அமுல்படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டப்பிரிவு 123(C)-ன் படி தொண்டு நிறுவனங்களின் கட்டிடங்களுக்கு மட்டும் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், அவினாசி சாலை கதவிலக்கம் 338 A,B,C -இல் உள்ள PSG மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி வளாகக் கட்டிடங்களுக்கு கடந்த 1992-ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட சொத்து வரி விதிப்பு விபரங்கள் பின்வருமாறு:

| கதவு இலக்கம் | கட்டிடம் | பழைய வரிவிதிப்பு | தற்போதைய புதிய வரிவிதிப்பு எண்கள் |
|---|---|---|---|
| 338A | PSG Hospital | 9029 | 5659858 |
| 338B | PSG Inst. Of Medical Science & Research | 9030 | 5659859 |
| 338C | PSG Hostels | 9031 | 5659860 |

பின்னர் தமிழ்நாடு சட்டதிருத்தம் 42/1994-ன் படி மாநகராட்சி சட்டப்பிரிவு 123(c) திருத்தம் செய்யப்பட்டு 01.04.1994 முதல் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு முழுமையான வரிவிலக்கு அனுமதிக்கப்பட்டது.

இவைகளைச் சார்ந்து அறக்கட்டளை எனவும் கல்வி நிறுவனம் எனவும் முழுமையான சொத்து வரி விலக்கு கோரி PSG நிறுவனத்தினர் கடந்த 1992-ம் ஆண்டு முதல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்து பல வழக்குகள் நடத்தி வந்தனர்.

இந்நிலையில் பார்வை 2-ல் கண்டுள்ளவாறு, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P.எண். 428/2011 வழக்கில் பிறப்பித்த இறுதி உத்தரவில் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் விபரம் வருமாறு.

In the light of the discussion as above, the impugned demands are set aside and the following directions issued, to be scrupulously followed by the petitioner and respondent:

I) The demands under special notices dated 24.09.1992 in assessment Nos.9029, 9030, 9031, 9814 and 9815 amounting in toto to a sum of Rs.65,52,311/- shall be remitted by the petitioner within a period of two weeks from date of receipt of a copy of this order.

II) The respond shall supply the basis of assessment to the petitioner within a period of two weeks from date of receipt of a copy of this order and the Petitioner shall, within two weeks from date of receipt thereof, file its objections to the proposed assessment.

III) The respondent shall hear the petitioner, on notice, both on the question of exemption sought under Section 123(c) of the Act as well as the proposed basis of assessment, and orders shall be passed within four weeks from date of conclusion of personal hearing, in accordance with law.

இதனை தொடர்ந்து PSG நிறுவனத்தினர் சமர்ப்பித்துள்ள அவர்களது மனுவில் மருத்துவ கல்லூரி, மருத்துவமனை, விடுதி ஆகிய மூன்று வரி விதிப்புகளுக்கும் வரிவிலக்கு கோரிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 1.10.2017 முதல் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி சலுகை ரத்து செய்யப்பட்டது குறித்து எவ்வித ஆட்சேபனையும் செய்யப்படவில்லை.

இது தொடர்பாக பார்வை 5-ல் கண்டுள்ளவாறு மாநகராட்சி உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.K.மகேஷ் அவர்கள் வழங்கியுள்ள கருத்துரையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

From reading of above order so far College buildings are concerned, property tax was exempted upto 2017 (1st half year). Thereafter, by inserting new amendment in Section 123(c) of Coimbatore City Municipal Corporation Act, the private educational institutions are liable to pay property tax. Hence, the College buildings are liable to pay tax from 2017 (2nd half year) onwards, In so far as hospital buildings are concerned, it has to be ascertained before passing assessment order as per directions of the Hon'ble High Court whether the hospital buildings used for only educational purpose and run purely on philanthropic lines as narrated in paragraph 11 of the order in the above said Writ Petition. To ascertain the same, the Assistant Commissioner, east Zone must collect necessary documents to show that the hospital building is only used for education purpose and they are not levying any charges from the patients for hospitalization and out patient treatment and the hospital runs purely on philanthropic lines. After collecting necessary documents from the petitioner to ascertain the same, a separate assessment order may be passed in respect of hospital buildings.

மேற்படி விபரங்களின்படி உயர்நீதி மன்ற வழக்கு சம்பந்தப்பட்ட மூன்று வரிவிதிப்புகளில் வரிவிதிக்கப்பட்ட சமயம் முதற்கொண்டு கல்வி நிறுவன கட்டிட வகைப்பாட்டிலேயே உள்ள PSG மருத்துவ கல்லூரி கட்டிடத்திற்கான சொத்து வரிவிதிப்பு வரிவிதிப்பு எண் 5659859-க்கு மட்டும் 1998-99 II-ம் அரையாண்டு முதல் 2017-18 I-ம் அரையாண்டு வரையிலான கேட்பு ரூபாய் 1,61,33,810/ -ஆனது சட்டப்படி நிலைக்கக்தக்கது அல்ல என்பதால் அதனை நீக்கம் செய்யவும், 2017-18 II-ம் அரையாண்டு முதல் மேற்படி வரி விதிப்பு எண். 5659859-னை வசூலிக்கதக்க இனத்திற்கு மாற்றி சொத்துவரி வசூலிக்கவும், பார்வை (5)-ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின் படி மாமன்றத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: 1386/2021/A1(கி)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 274 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 10

கோவை மாநகராட்சி தெற்குமண்டலத்திற்குட்பட்ட வார்டுபகுதிகளில் உள்ள மாநகராட்சி பள்ளியில்உள்ள கழிப்பிடத்திற்கு மராமத்து பணி செய்ய அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாகஅனுமதிவேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எ ண் | வார்டு எண் | ந.க. எண் | பணியின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 91 | 4920 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண். 91 க்குட்பட்ட குளத்துப்பாளையம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் உள்ள கழிப்பிடங்களுக்கு மராமத்து பணிசெய்தல். | 9.90 |
| 2 | 89 | 4919 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண் .89 க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் மற்றும் ராமச்செட்டிபாளையம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் உள்ள கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி செய்தல். | 7.80 |
| 3 | 86 | 4915 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண். 86 க்குட்பட்ட முத்துகாலனி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் கழிப்பிடங்கள் கட்டுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள்செய்தல். | 3.25 |
| 4 | 88 | 4914 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டு எண்.88 க்குட்பட்ட ரைஸ்மில் ரோடு பகுதியிலுள்ள நடுநிலைப்பள்ளியில் கழிப்பிடங்கள் கட்டுதல். | 19.35 |
| 5 | 92 | 4924 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண் .92 க்குட்பட்ட பி.கேபுதூர் ஆரம்பப்பள்ளியில் உள்ள கழிப்பிடங்களுக்கு மராமத்துபணிசெய்தல். | 2.50 |
| 6 | 93 | 4923 / 2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண் .93 க்குட்பட்ட வெங்கட்ராமன் மற்றும் சர்ச் வீதியிலுள்ள பள்ளியில் கழிப்பிடங்களுக்கு மராமத்துபணிசெய்தல். | 5.30 |
| 7 | 94 | 4918 /2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண் .94 க்குட்பட்ட குறிச்சி மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கழிப்பிடங்கள் கட்டுதல். | 14.50 |
| 8 | 94 | 4917 /2022/ எம்.டி.4 | தெற்குமண்டலம் - வார்டுஎண். 94 க்குட்பட்ட மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கழிப்பிடங்களுக்கு அபிவிருத்தி பணிகள் மற்றும் பழைய பள்ளி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துதல். | 4.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | 94 | 4916 /2022/ எம்.டி.4 | **தெற்குமண்டலம் - வார்டுஎண். 94 க்குட்பட்ட குறிச்சி மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் சுற்றுச்சுவர்கட்டுதல்.** | 7.30 |
| 10 | 97 | 4922 /2022/ எம்.டி.4 | **தெற்குமண்டலம் - வார்டுஎண் .97 க்குட்பட்ட கோண்டீஸ் காலனி மற்றும் கே.வி.கேநகர் மாநகராட்சி பள்ளிகளில் கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி மற்றும் கழிப்பிடம் திரும்ப கட்டுதல்** | 9.45 |
| 11 | 100 | 4921/ 2022/ எம்.டி.4 | **தெற்குமண்டலம் - வார்டுஎண் .100 க்குட்பட்ட கணேசபுரம் முல்லை நகர் பகுதியிலுள்ள மாநகராட்சி பள்ளியில் கழிப்பிடங்களுக்கு மராமத்து பணி மற்றும் கூடுதல் கழிப்பிடம் கட்டுதல்** | 9,32 |
| | | | **மொத்தம்** | 92,87 |

மேற்படி பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க. எண் 4920 /2022/எம்.டி.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 275 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 11**

கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - பொறியியல் பிரிவு – வார்டு எண்.**90**-க்குட்பட்ட A' A' திட்ட சாலை தொட்டராயன் கோவில் வீதி விரிவாக்கம் பகுதியில் தார்தளம் அமைத்தல் பணிக்கு ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் (IUDM **2020-21)** கீழ் மதிப்பீடு ரூ.**3.50** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களிடம் **22.09.2020** தேதியில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, **28.10.2020** தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், தி/ள்.பி.செந்தில் அன் கோ மற்றும் திரு.எம்.துரைசாமி ஆகிய இரண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இரு நிறுவனங்களும் மதிப்பீட்டு தொகையினை விட கூடுதலாக விலைப்புள்ளி கோரியதால் விலை குறைப்பு கேட்கப்பட்டது. அதில், மதிப்பீட்டு தொகையினை விட **4.89%** அதிகம் கோரிய ஒப்பந்ததாரர் தி/ள்.பி.செந்தில் அன் கோ நிறுவனத்திற்கு **28.12.2020**-ல் பணி ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி தொட்டராயன் கோவில் வீதி விரிவாக்க சாலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளதால் காலதாமதம் ஏற்பட்டு சாலை பணி துவங்க இயலவில்லை. மேலும், அதிக விலை எற்றத்தால் மேற்படி பணியினை தொடர இயலாத நிலை உள்ளதால் பணியிலிருந்து விடுவிக்க கோரி ஒப்பந்ததாரர் தி/ள்.பி.செந்தில் அன் கோ அவர்கள் **22.06.2022**-ல் கடிதம் அளித்துள்ளார்கள்.

மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் **15.06.2022**-ல் கோயம்புத்தூர் மாநகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் IUDM திட்டத்தில் துவங்கப்படாமல் உள்ள பணிகளை ரத்து செய்யும்படி உத்திரவிட்டார்கள். எனவே, இப்பணியினை ரத்து செய்ய அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். ந.க.எண்.**4539/2020**/எம்.டி.**4** (சிப்பம் **–3)**

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 276 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 12**

கோயம்புத்தூர் மாநகராட்சி அனைத்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுகளில் உள்ள மாநகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகள் மற்றும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கழிப்பறைகள், கூடுதல் வகுப்பறைகள் இல்லாத காரணத்தினால் மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே கூடுதல் கழிப்பறைகள் மற்றும் வகுப்பறைகள் கட்டுவது அவசியமாக உள்ளது. இப்பணியை **“ஆரம்பப்பள்ளி கல்வி நிதி”–**யின் கீழ் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு பணிகள் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **வா எண்** | **மண்டலம்** | **பொருள்** | **மதிப்பீடுத் தொகை (ரூ.லட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| **1.** | **56** | கிழக்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.**56–**க்குட்பட்ட ஒண்டிப்புதூர் (வடக்கு) பகுதியில் உள்ள மாநகராட்சி துவக்க பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | **15.50** |
| **2** | **60** | கிழக்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.**60–**க்குட்பட்ட வரதராஜபுரம் பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | **10.00** |
| **3** | **39** | மேற்கு | மேற்கு மண்டலம் வார்டு எண்.**39–**க்குட்பட்ட சிக்கராயபுரம் மாநகராட்சி ஆரம்பப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | **10.00** |
| **4** | **39** | மேற்கு | மேற்கு மண்டலம் வார்டு எண்.**39–**க்குட்பட்ட அஜ்ஜனூர் மாநகராட்சி துவக்கப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் | **10.00** |
| **5** | **15** | வடக்கு | வடக்கு மண்டலம் வார்டு எண் **15–**க்குட்பட்ட சுப்பிரமணியம் பாளையம் மாநகராட்சி ஆரம்பபள்ளியில் கழிப்பிடம் மராமத்து செய்தல். | **8.50** |
| **6** | **15** | வடக்கு | வடக்கு மண்டலம் வார்டு எண்.**15–**க்குட்பட்ட கே.என்.ஜி புதூர் மாநகராட்சி ஆரம்பபள்ளியில் கழிப்பிடம் மராமத்து செய்தல். | **7.10** |
| **7** | **67** | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண்.67–க்குட்பட்ட ரங்கநாதபுரம், ராம் நகர் பகுதியில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல். | **24.50** |
| **8** | **68** | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண்.68–க்குட்பட்ட வட கோவை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் கழிப்பிடம் கட்டுதல். | **18.00** |
| **9** | **31** | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண்.31–க்குட்பட்ட ரத்தினபுரி மாநகராட்சி ஆரபப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கூடுதல் கழிப்பிடம் கட்டுதல் மற்றும் மேம்பாட்டு பணிகள் செய்தல். | **25.00** |
| | | | **மொத்தம்** | **128.60** |

எனவே, மேற்படி பள்ளிகளுக்கு பள்ளி மாணவ, மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தேவைப்படும் கழிப்பறைகள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு “ஆரம்பப்பள்ளி கல்வி நிதி”–யின் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம். ந.க.எண். 5099 /2022/எம்.டி.5

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 277 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 13**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள். 22. 08.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் – வார்டு எண் 85–க்குட்பட்ட பகுதிகளிலுள்ள குடிநீர் கசிவுகளை ஒராண்டிற்கு பராமரித்தல் ந.க.எண்.3458/2022/எம்.டி.4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.மணி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டை விட 2.30% குறைவு<br>2).தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 2.47% குறைவு | தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டை விட 2.47% குறைவு |
| 2 | தெற்கு மண்டலம் – வார்டு எண். 92க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை (48 எண்ணிக்கை) ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் ந.க.எண்.2757/2022/எம்.டி4 | 14.60 | ம.தீ.எண். 114 நாள். 26.05.22 | முதலாம் அழைப்பு 02.08.22 | 1).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 5.80% அதிகம் | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 0.04% குறைவு (விலை குறைப்பிற்குபின்) |
| 3 | தெற்கு மண்டலம் – வார்டு எண் 78க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை (31 எண்ணிக்கை) ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் ந.க.எண்.2768/2022/எம்.டி4 | 11.50 | ம.தீ.எண். 113 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).திரு.ஏ. விஜயகுமார் மதிப்பீட்டுதொகை | திரு.ஏ. விஜயகுமார் மதிப்பீட்டு தொகை |
| 4 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.76க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை (32 எண்ணிக்கை) ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் (ந.க.எண்.2766/2022/எம்.டி4 | 11.00 | ம.தீ.எண். 113 நாள். 26.05.22 | இரண்டாம் அழைப்பு 02.08.22 | 1).தி/ள். ஸ்ரீ ஹரி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 0.04% **குறைவு** | தி/ள். ஸ்ரீ ஹரி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 0.04% **குறைவு** |
| 5 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.87க்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் ஆழியார் விநியோகம் குழாய்களில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் (ந.க.எண்.3451/2022/எம்.டி4) | 7.50 | ம.தீ.எண். 189 நாள். 30.06.22 | முதலாம்அழைப்பு 11.08.22 | 1).திருமதி.வி. சாந்தி மதிப்பீட்டைவிட 0.07% குறைவு<br>2).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 2.96% அதிகம் | திருமதி.வி.சாந்தி மதிப்பீட்டைவிட 0.07% குறைவு |
| 6 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.88க்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் ஆழியார் விநியோகம் குழாய்களில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் ந.க.எண்.3452/2022/எம்.டி4 | 7.50 | ம.தீ.எண். 189 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திருமதி.வி. சாந்தி மதிப்பீட்டைவிட 0.08% குறைவு<br>2).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 1.93% அதிகம் | திருமதி.வி.சாந்தி மதிப்பீட்டைவிட 0.08% குறைவு |
| 7 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.93-க்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் ஆழியார் விநியோகம் குழாய்களில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல் ந.க.எண்.3457/2022/எம்.டி4 | 7.80 | ம.தீ.எண். 189 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு.எம்.ராம்ராஜ் மதிப்பீட்டைவிட 0.06% **குறைவு**<br>**2).திரு.எஸ்.ராஜு** மதிப்பீட்டைவிட 0.07% **குறைவு**<br>3).திரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டைவிட 0.31% **அதிகம்**<br>4).**தி**/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீட்டைவிட 4.99% **குறைவு** | **தி**/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீட்டைவிட 4.99% **குறைவு** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.98-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல். ந.க.எண்.3463/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).திரு.எம்.ராம்ராஜ் மதிப்பீட்டைவிட 0.02% **அதிகம்** 2).திரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டைவிட 0.07% **குறைவு** | திரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டைவிட 0.07% **குறைவு** |
| 9 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.100-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல். ந.க.எண்.3465/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.சர்வேஷ் அண்ட் கம்பெனீஸ் மதிப்பீட்டைவிட 0.83% **குறைவு** 2).திரு. எம்.பெருமாள் மதிப்பீட்டைவிட 0.01% **அதிகம்** | தி/ள்.சர்வேஷ் அண்ட் கம்பெனீஸ் மதிப்பீட்டைவிட 0.83% **குறைவு** |
| | மொத்தம் | 80.90 | | | | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.3458/2022/எம்.டி.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 278 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 14**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதியில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல், ஆழ்குழாய் கிணறுகளை ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல் மற்றும் நடைபாதை பாலத்தினை மாற்றியமைத்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள். 22.08.2022 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு த் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம்– வார்டு எண். 88 மற்றும் 93க்குட்பட்ட பாலக்காடு பிரதான சாலை ரைஸ்மில் ரோடு சந்திப்பில் அமைந்துள்ள இரும்பிலான உயர்மட்ட நடைபாதை பாலத்தினை வார்டு எண்.87க்குட்பட்ட குனியமுத்தூர் மேல்நிலைப்பள்ளி அருகில் மாற்றியமைத்தல் ந.க.எண்.2944/2022/எம்.டி.4 | 35.60 | ம.தீ.எண். 183 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 05.08.22 | 1).திரு.ஆர்.உமாபதி மதிப்பீட்டை விட 0.06% குறைவு 2).தி/ள். என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 1.22% குறைவு | தி/ள். என்.எம்.எஸ் இன்ஜினியர்ஸ் மதிப்பீட்டை விட 1.22% குறைவு |
| 2 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.97-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல். ந.க.எண்.3462/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள். பள்ளிபராம்பில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.25% **அதிகம்** 2).திரு.பி.ஏ.தாமஸ் மதிப்பீட்டைவிட 1.34% **குறைவு** | திரு.பி.ஏ.தாமஸ் மதிப்பீட்டைவிட 1.34% **குறைவு** |
| 3 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.96-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல். ந.க.எண்.3461/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள். பள்ளிபராம்பில் கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.25% **அதிகம்** 2).திரு.பி.ஏ.தாமஸ் மதிப்பீட்டைவிட 6.24% **குறைவு** | திரு.பி.ஏ.தாமஸ் மதிப்பீட்டைவிட 6.24% **குறைவு** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.95-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல்.<br>ந.க.எண்.3460/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 2.44% குறைவு<br><br>2).திரு.எம். பெருமாள் மதிப்பீட்டைவிட 2.31% அதிகம் | தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 2.44% குறைவு |
| 5 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.99-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல்.<br>ந.க.எண்.3464/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.சர்வேஷ் அண்ட் கம்பெனிஸ் மதிப்பீட்டைவிட 0.83% **குறைவு**<br><br>2).தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 0.77% குறைவு | தி/ள்.சர்வேஷ் அண்ட் கம்பெனிஸ் மதிப்பீட்டைவிட 0.83% **குறைவு** |
| 6 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.94-க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் கசிவுகளை ஒரு வருட காலத்திற்கு சரிசெய்தல்.<br>ந.க.எண்.3459/2022/எம்.டி4 | 7.00 | ம.தீ.எண். 192 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 04.08.22 | 1).தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 3.24% குறைவு<br><br>2).திரு.எம். பெருமாள் மதிப்பீட்டைவிட 4.64% அதிகம் | தி/ள்.ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைவிட 3.24% குறைவு |
| 7 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.92-க்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் ஆழியார் விநியோகம் குழாய்களில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல்<br><br>ந.க.எண்.3456/2022/எம்.டி4 | 8.90 | ம.தீ.எண். 189 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டைவிட **1.68% அதிகம்**<br><br>2). திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 0.08% குறைவு | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 0.08% குறைவு |
| 8 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.89க்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்குழாய் கிணறுகளை (31 எண்ணிக்கை) ஒரு வருட காலத்திற்கு இயக்கிப் பராமரித்தல்<br><br>ந.க.எண்.2774/2022/எம்.டி4 | 11.60 | ம.தீ.எண். 113 நாள். 26.05.22 | முதலாம் அழைப்பு 02.08.22 | 1).தி/ள்.ஸ்ரீ ஹரி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 0.04% குறைவு<br><br>2).திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 11.17% **அதிகம்** | தி/ள்.ஸ்ரீ ஹரி எண்டர்பிரைசஸ் மதிப்பீட்டைவிட 0.04% குறைவு |
| 9 | தெற்கு மண்டலம் – வார்டு எண்.90-க்குட்பட்ட பகுதிகளில் சிறுவாணி மற்றும் ஆழியார் விநியோகம் குழாய்களில் குடிநீர் கசிவுகளை சரிசெய்தல்<br>ந.க.எண்.3454/2022/எம்.டி4 | 8.50 | ம.தீ.எண். 189 நாள். 30.06.22 | முதலாம் அழைப்பு 11.08.22 | 1).திரு.ஏ.எம். ராஜகோபால் மதிப்பீட்டைவிட **0.19% அதிகம்**<br><br>2). திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 0.07% குறைவு | திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டைவிட 0.07% குறைவு |
| | மொத்தம் | 99.60 | | | | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளின் ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்.2944/2022/எம்.டி.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 279 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 15

**பொருள்** : பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திருமதி.ஜே.செல்விகிறிஸ்டினாள், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், மேற்கு மண்டலம் அவர்கள் சேலம் மாநகராட்சிக்கு ஒருவழி பணிமாறுதல் கோருவது சம்பந்தமாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பித்தல் –தொடர்பாக.

**பார்வை** : திருமதி.ஜே.செல்விகிறிஸ்டினாள், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் அவர்களின் விண்ணப்பம் நாள். 13.06.2022

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்தில் பணிபுரிந்து வரும் திருமதி.ஜே.செல்விகிறிஸ்டினாள், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர், அவர்கள் தனது கணவர் சேலத்தில் வசித்து வருவதாகவும் தனது வயதான தந்தை, மாமனார், மாமியார் ஆகியோர்களை கவனித்து கொள்ள வேண்டி இருப்பதால் தனக்கு சேலம் மாநகராட்சிக்கு பணிமாறுதல் செய்து தருமாறு பார்வையில் காணும் கடிதத்தில் கோரியுள்ளார்.

எனவே, திருமதி.ஜே.செல்விகிறிஸ்டினாள், இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் அவர்கள் சேலம் மாநகராட்சி, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் பணியிடத்திற்கு ஒரு வழி மாறுதலில் செல்ல அனுமதி வேண்டி மாமன்ற அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.3885/2022/எம்சி9)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 280 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு நாள். 22.07.2022. அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணியினை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எ ண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிழக்கு மண்டலம் - கிழக்கு மண்டல அலுவலகத்தில் கூடுதல் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். (ந.க.எண் 2729/2022/எம்.டி.3) | **99.70** | ம.தீ.எண். **117** நாள். **26.05.22** | முதலாம் அழைப்பு **01.07.22** | **1)**.திரு.எஸ்.ராஜு மதிப்பீட்டை விட **0.01%**குறைவு<br><br>**2)**.தி/ள்.ஏ.பி.ஆர் கன்ஸ்ட்ரக்சன் மதிப்பீட்டை விட **0.06% அதிகம்**<br><br>**3)**.திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட **4.99%** குறைவு<br><br>**4)**.திரு.கே.ராமசாமி மதிப்பீட்டை விட **4.58%** குறைவு | திரு.என். குருவாயூரப்பன் மதிப்பீட்டை விட **4.99%** குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணியின் ஒப்பந்த புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் 2729/2022/எம்.டி.3

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 281 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் : 70க்குட்பட்ட தேவாங்கப்பேட்டை சாலையில் T.S எண் : 2012 எண்ணிட்ட நில அளவை எண்ணில் 75 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவ இடத்தில் மெக்ரிக்கர் வீதி மேதவர் காலனி மக்கள் குடிசை மாற்று வாரிய கட்டிடம் கட்டும் வரை தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டு இருந்தனர். தற்போது குடிசை மாற்று வாரிய கட்டிடம் முடிவடைந்து மேதவர் காலனி மக்கள் திரும்ப அடுக்குமாடி குடியிருப்பில் குடியமர்த்தப்பட்டு மாநகராட்சி இடம் காலியாக வைக்கப்படுகிறது. இந்நிலையில் டாக்டர். கிருஷ்ணசாமி சாலையில் அமைந்துள்ள புரூக் பீல்ட்ஸ் வணிக வளாகத்தில் வார இறுதி நாட்களில் அதிகளவு கூட்டம் கூடுவதால் பொதுமக்கள் ஒழுங்கற்ற வகையில் கிருஷ்ணசாமி சாலையில் வாகனங்கள் நிறுத்துவதாலும் இதனை சுற்றியுள்ள சாலைகளிலும் அதிகளவு வாகனங்கள் நிறுத்துவதாலும் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகிறது.

மேலும் பல்வேறு கட்டடங்களில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சாலை பாதுகாப்பு ஆய்வு கூட்டங்களிலும் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் தலைமையிலான ஆய்வு கூட்டங்களிலும் மேற்குறிப்பிட்ட பகுதியில் ஒழுங்கற்ற நிலையில் நிறுத்தப்படும் வாகனங்கள் நிறுத்தம் குறித்து ஆலோசிக்கப்பட்டதில் கோயம்புத்தூர் மாநகர காவல்துறையினர் இப்பகுதியில் புதிதாக வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

எனவே இதனை கருத்தில் கொண்டு காலியாக உள்ள மாநகராட்சி மாட்டுத் தொழுவ இடத்தில் ஏற்கனவே பழுதடைந்த நிலையில் உள்ள சிமெண்ட் கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி 85 எண்ணிக்கையில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் மற்றும் 95 எண்ணிக்கையில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம் ஏற்படுத்துவதன் மூலம் தேவாங்கபேட்டை சாலை, கிருஷ்ணசாமி சாலை மற்றும் இப்பகுதியினை சுற்றியுள்ள சாலைகளில் ஒழுங்கற்ற முறையில் நிறுத்தப்படும் வாகனங்களை முற்றிலுமாக கட்டுப்படுத்த இயலும். மேலும் இந்த வாகனம் நிறுத்துமிடம் அமைப்பதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் பெறவும் வழிவகையுள்ளது.

எனவே மாநகராட்சி மாட்டுத் தொழுவ வளாக காலியிடத்தில் புதிதாக வாகன நிறுத்துமிடம் அமைக்கவும், மேற்படி பணிக்கு **ரூ.52,00,000/–** மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் 5334 /2022/எம்.டி.2

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 282 நாள் 19.10.2022**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 72க்குட்பட்ட திவான் பகதூர் சாலையில் அமைந்துள்ள பலஅடுக்கு வாகன நிறுத்துமிடம் வளாகத்தின் முன்புறம் உள்ள மாநகராட்சி கட்டிடத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகளில் ஆசிரியர்களுக்கான கூட்டுறவு சங்கம் 982 ச.அடி பரப்பளவில் மன்றத் தீர்மானம் எண் 1102 நாள் 19.10.1955 இன்படி மிகவும் குறைந்த பெயரளவிற்கான வாடகையை ஆண்டொன்றிக்கு ரூ.1 வீதம் மாநகராட்சியால் செலுத்தி தற்போது வரை இயங்கிக் கொண்டு வருகிறது.

மேற்படி கட்டிடமானது கட்டி 60 வருடங்களுக்கு மேலாக ஆனதால் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து விழும் தருவாயில் உள்ளது. மேலும் இக்கட்டிடத்திற்கு கீழ்புறமுள்ள பலஅடுக்கு வாகன நிறுத்துமிடத்திற்கு வாகனங்கள் வெளியே செல்ல ஏதுவாக வெளியேறும் வாயில் அமைக்கவேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடித்து ரூ. 9,50,000/- மதிப்பீட்டில் அப்புறப்படுத்தவும், அப்புறப்படுத்திய பிறகு அந்த பகுதியில் வாகன வெளியேறுதல் வாயில் அமைக்க அனுமதியும் வேண்டப்படுகிறது.

மேலும் தற்போது இயங்கிவரும் மாநகராட்சி ஆசிரியர்களின் கூட்டுறவு சங்கத்தினை இதே திவான் பகதூர் சாலையில் காலியாக உள்ள மாநகராட்சி வணிக வளாக கட்டிடத்தில் 1243 ச.அடி பரப்பளவில் மாற்றியமைக்கவும், அதற்குண்டான பெயரளவு வாடகையாக மாதம் ஒன்றிற்கு ரூ.1000/- ஐ கூட்டுறவு சங்கம் மூலம் மாநகராட்சிக்கு வசூல் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண் **5333 /2022/எம்.டி.2**

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 283 நாள் 19.10.2022</u>**

அனுமதிக்கப்பட்டது

---

## பொருள் எண் 19

பார்வை :

1. மனுதாரர் திரு.C.கணேசன், M/s.Martin Property Developers Private limited, Coimbatore என்பவரின் விண்ணப்பம்.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12966/2011/பிஏ1 நாள்.27.03.2012 -உத்தரவு.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.5091/2022/TCP-3 நாள்.14.09.2022 கடிதம் உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களுக்கு முகவரியிட்டது.
4. நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்டப்பொருள் தீர்மானம் எண். **11**, நாள்: **18.10.2022.**

*******

மனுதாரர் M/s.Martin Property Developers Private limited, Coimbatore என்பவர் தாங்கள் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலம், உப்பிலிபாளையம், கிராமம், க.ச.எண்கள், 480/1A1, 481/pt மற்றும் 488/1A1, நகரளவு வார்டு எண். AH (34) பிளாக் 37, நகரளவு எண்.323/1B, 324 பகுதியில், 6758.25 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையில், 88 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு உபயோகக் கட்டுமானம் கட்டுவதற்கு உத்தேசித்து கடந்த 2011 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பித்ததின் பேரில், பார்வை 2ல் காணும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவில் மேற்கண்ட கட்டுமானத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவில் தெரிவித்தவாறு, மனுதாரரின் மனையிடத்தினுள் அமையும் 699.46 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது உபயோக ஒதுக்கீடு இடத்தினை தானப்பத்திரம் மூலமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளதாகவும் தெரிவித்து, பல்வேறு சூழ்நிலைகளால் மேற்கண்ட உத்தேசத்தினை தொடர இயலாததால், நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஏற்கனவே பார்வை 2ல் காண் திட்ட அனுமதி வழங்க இசைவளிக்கப்பட்டதை பார்வை 3ல் காண் கடிதத்தின்படி ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்து, மேற்கண்ட குடியிருப்பு கட்டுமான உத்தேசத்தினை தாங்கள் கைவிட்டுள்ள நிலையில் தங்களால் உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு உபயோக திறவிடத்தினை தங்களுக்கு திரும்ப வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

மனுதாரர் M/s.Martin Property Developers Private limited, Coimbatore என்பவருக்கு கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட கிழக்கு மண்டலம், உப்பிலிபாளையம், கிராமம், க.ச.எண்கள், 480/1A1, 481/pt மற்றும் 488/1A1, நகரளவு வார்டு எண். AH (34) பிளாக் 37, நகரளவு எண்.323/1B, 324 பகுதியில், அமையும் 6758.25 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு, மனை ஒப்புதலும் அம்மனையில் Block –A, Block-B, Block -3 என மூன்று பிளாக்குகளில் Stilt தளம் + 4 தளங்களில் 88 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு கட்டுமானம் கட்டுவதற்கு, பார்வை 2ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் உத்தரவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவில் தெரிவித்துள்ளவாறு, மனுதாரர் மேற்கண்ட மனையிடத்தினுள் அமையும் 699.46 சதுர மீட்டர் பரப்பு கொண்ட பொது உபயோக ஒதுக்கீடு இடத்தினை பதிவு செய்யப்பட்ட தானப்பத்திர எண்.7733/2012 நாள்.08.09.2012 மூலமாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார்கள்.

மனுதாரரின் கோரிக்கையின் பேரில், நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களால் பார்வை 2ல் வழங்கப்பட்ட உத்தரவு, பார்வை 3ல் காண் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி ரத்து செய்யப்பட்டுள்ளது. இடம் நேராய்வு செய்யப்பட்டது. மனையிடத்தில் கட்டுமானம் எதுவும் கட்டப்படவில்லை. காலியிடமாக உள்ளது.

எனவே மனுதாரரால் மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட 699.46 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட பொது ஒதுக்கீடு உபயோக திறவிட இடத்தினை மனுதாரருக்கு திரும்ப வழங்க கோரும் முன்மொழிவினை அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஒப்புதல் பெற நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலமாக அனுப்பி வைக்க பார்வை 4–ல் நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் தீர்மானம் எண்.11–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றபொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். 7097/2022/எம்எச்2(கி)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 284 நாள் 19.10.2022</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

(ஒப்பம்) ஆ. கல்பனா,
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி